**நல்லூர் பிரதேச சபை**

--------------------------------

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

----------------------

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

------------------------------------------

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 28 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நல்லூர் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

----------------------------------

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------

**பெறவேண்டிய கணக்குகள்**

----------------------------------

ஐந்து வருடங்களுக்கு மேலாக திருநெல்வேலி சந்தை கட்டட புனரமைப்பிற்காக ஒப்பந்தக்காரரொருவருக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 151,437 குறித்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தும் நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்படாமலுள்ளது.

#### 1.3.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

--------------------------------------------------

**கணக்காய்வுக்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

-------------------------------------------------------------

288 நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது பௌதீக செவ்வை பார்த்தலுக்கு கிடைத்திருக்காமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 இணங்காமைகள்**

---------------------

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158(1) | 6,879,629 | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்குச் சபையின் செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம் | | பணத்தை அல்லது களஞ்சியப் பொருட்களை பெறுவதற்கு அல்லது அவற்றை கட்டுக்காப்பில் வைப்பதற்கு நிர்வாக ரீதியாகப் பொறுப்பாக உள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிட மிருந்து பிணைப்பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்<br>நிதி ஒழுங்கு விதி 571 | 2,451,654 | இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர் வைப்பு மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் 26 ஜுன் 2008 இன் 13/2008 ஆம் இலக்கம். | | மாதத்திற்கான நாளாந்த வாகன ஓட்ட அட்டவணை தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.3.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

மூன்று அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த உழைக்கும் போது செலுத்தும் வரி கூட்டுமொத்தம் ரூபா 5,922, Sec/2013/07 ஆம் இலக்க 01 செப்தெம்பர் 2013 ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கடந்த 01 வருடத்துக்கு மேலாக அனுப்பப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 83,423,712 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 110,771,569 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 2,615,000 | 2,535,003 | 2,600,466 | 6,879,629 | 2,725,000 | 3,005,975 | 2,599,792 | 6,899,457 |
| வாடகைகள் | 28,585,000 | – | 30,103,144 | – | 25,288,600 | – | 21,454,260 | – |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,248,700 | – | 3,442,528 | – | 2,826,000 | – | 3,450,048 | – |
| ஏனைய வருமானம் | 42,812,000 | – | 89,464,080 | 215,634,685 | 43,392,000 | – | 63,403,076 | 193,861,477 |
| | 772,260,700 | 2,535,003 | 125,610,218 | 222,514,314 | 74,231,600 | 3,005,975 | 90,907,176 | 200,760,934 |

### 2.2.2 வீதவரிகள்

வீதவரி நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 6,879,629 கடந்த ஒன்று தொடக்கம் ஐந்து வருடங்களாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடைக் குத்தகை நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 146,916 கடந்த இரண்டு தொடக்கம் ஐந்து வருடங்களாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சந்தைக்கடை வாடகைகள் கூட்டுமொத்தம் ரூபா 813,324 கடந்த இரண்டு தொடக்கம் ஐந்து வருடங்களாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 2,000 கடந்த ஒரு வருடமாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 203,870,302 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அனுமதி பெறப்பட்டிராது அமைக்கப்பட்டிருந்த மூன்று தொலைத்தொடர்புக்கோபுரங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்களினையும் மதிப்பீடு செய்து அறவிடுவதற்குரிய நடவடிக்கைகளினை சபை மேற்கொள்ளத் தவறியிருந்தது.

(ஆ) திருநெல்வேலி கடைத்தொகுதி மற்றும் கொக்குவில் பொதுநூலக புனரமைப்பு வேலைகள் என்பவற்றினை திட்டமிட்டபடி மீளாய்வாண்டில் பூரணப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுமதி சேர் வரி செலுத்தும் தகவு செயல்வலுவிலில்லாத ஒப்பந்தக்காரர்களினால் நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பில் பெறுமதிசேர்வரி கூட்டுமொத்தம் ரூபா 417,345 கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வருமானத்திற்கு மாற்றப்பட்டிருக்காது சபையினால் பொது வைப்பு கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.2.1 விளைவற்ற சொத்துக்கள்**

ரூபா 5,354,000 கிரயத்தில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த குருந்தன்புலம் காணியானது போக்குவரத்து பாதையற்ற காரணத்தினால் கடந்த ஆறு வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றது.

**3.2.2 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் ஐந்து வகையான உழவு இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரப்பெட்டிகள் சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 14,356 தொடக்கம் ரூபா 45,167,671 அல்லது 0.55 சதவீதம் தொடக்கம் 123 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே

ரூபா 2,081 தொடக்கம் ரூபா 4,261,824 அல்லது 1.54 சதவீதம் தொடக்கம் 6.73 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
| --- | --- |
| கணக்கீடு | அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |